கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற டிசம்பர் 19, 20ம் தேதிகளில் ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தரவுள்ளார். சோலாரில் நடைபெறும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மேடையை மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி பார்வையிட்டு ஆய்வு செய்து அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, காவல் கண்காணிப்பாளர் ஜவகர், மாநகராட்சி ஆணையாளர் மனிஷ், உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

தந்தை பெரியார் குடும்பத்தின் சார்பில் முதல்வருக்கு உருக்கமான நன்றி! நன்றி!!

மறைந்த ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் புதல்வர் இ.சஞ்சய் சம்பத் நெகிழ்ச்சி!

சென்னை, டிச. 18-

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் மறைந்த ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் புதல்வர் இ.சஞ்சய் சம்பத் விடுத்துள்ள உருக்கமிகு அறிக்கை வருமாறு:

தந்தை பெரியார் பேரன், சொல்லின் செல்வர் ஈ.வெ.கி. சம்பத் அவர்களின் தலைமகன், தமிழக காங்கிரஸ் தொண்டர்களால் தன்மானத் தலைவர் என்று அன்போடு அழைக்கப்பட்ட எனது தந்தை ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் உடல் நலம் குன்றி மருத்துவனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி கடந்த 14-12-2024 சனிக்கிழமை காலை நம்மை விட்டு பிரிந்தார்.

மத்திய அமைச்சர், மூன்று முறை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர், ஈரோடு கிழக்கு சட்ட மன்ற உறுப்பினர் என்று பல்வேறு பொறுப்புகளில் தனித்துவத்தோடு செயல்பட்டு, மக்களின் பிரச்சினைகளை தனக்கே உரிய பாணியில் பளிச்சென எடுத்து ரைத்த அவரது அரசியல் பயணத்தை தமிழகம் நன்கு அறியும்.

எனது தந்தையார் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்ட செய்தி அறிந்தவுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவமனைக்கே அமைச்சர் பெருமக்களுடன் நேரில் வந்து அவரது உடல் நிலையை அக்கறையுடன் கேட்டறிந்து, மருத்துவர்களிடமும் ஆலோசனை செய்துவிட்டுச் சென்றார்.

அவர் இயற்கை எய்திய சில மணி நேரத்திலேயே எங்கள் இல்லத்திற்கு வருகை தந்து எங்களுக்கு ஆறுதல் வழங்கினார். இறுதிச்சடங்கு நடைபெற்ற மறுநாளும் எங்கள் இல்லத்திற்கு வருகை தந்து ஆறுதல் கூறியதோடு இறுதிச் சடங்கு ஏற்பாடுகளை எங்கள் குடும்பத்தின் மூத்த அண்ணனாய் கேட்டறிந்து, எனது தந்தையின் உடல் முழு அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்படும் என்ற அரசு உத்தரவையும் பிறப்பித்து எனது தந்தைக்குப் பெருமை சேர்த்தார்.

திராவிட பாரம்பரியமும், தேசிய சிந்தனையும் கொண்ட எங்கள் குடும்பம் அதே வழியில் என்றும் பயணிக்கும்.

துயரமான இந்த வேளையில் எங்களுக்கு துணை நின்ற முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களு க்கும், எங்களுக்கு நேரிலும், அலைபேசி வாயிலாகவும் ஆறுதல் வழங்கி, இறுதி அஞ்சலி நிகழ்வில் எங்களோடு தோள் நின்ற அனைவருக்கும் எனது தாயார் சார்பாகவும், தந்தை பெரியார் குடும்பம் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இ.சஞ்சய்சம்பத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

1. மாற்றுத் திறனாளிகளுக்கான மாற்றுவழி என்ன?

ஆ. ராசா

பள்ளிகளில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு ஏற்ற முறையான கழிவறைகள் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் படிப்பை பாதியில் கைவிடும் குழந்தைகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகமாவதை சுட்டிக்காட்டி பேசிய திமுக துணைப் பொதுச் செயலாளரும் நீலகிரி தொகுதி மக்களவை உறுப்பினருமான ஆ. ராசா அதற்கு ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள், மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள் மற்றும் அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி விவரங்கள் பற்றிய வெளிப்படையான அறிக்கையை வெளியிடுமாறு ஒன்றிய அரசின் கல்வி அமைச்சரிடம் நாடாளுமன்றத்தில் கோரியுள்ளார்.

2. அபாயகரமான கழிவுகளுக்கு ஒன்றிய அரசு அனுமதியா?

கே. ஈஸ்வரசாமி

சில நிறுவனங்கள் நாட்டில் தடைசெய்யப்பட்ட அபாயகரமான கழிவுகளை சரியான அனுமதி இல்லாமல் சுதந்திரமாக இறக்குமதி செய்கின்றன எனும் செய்தி குறித்து ஒன்றிய அரசிடம் மக்களவையில் பொள்ளாச்சி எம்.பி. கே. ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார். அரசிடம் இரசாயனக் கழிவுகளை இறக்குமதி செய்வதற்காக பதிவு செய்யப்பட்டவர்களின் பட்டியல் உள்ளதா என்றும் கடந்த மூன்று ஆண்டுகளில் விதியை மீறி இறக்குமதி செய்பவர்கள் மீது பெறப்பட்ட புகார்களின் எண்ணிக்கை மற்றும் அப்புகார்களின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்களையும் வெளியிடுமாறு அவர் கோரியுள்ளார்.

3. வாய்ப்புகளை வழங்கியதா வேலைவாய்ப்பு மையங்கள்?

சி.என்.அண்ணாதுரை

நாட்டில் வேலை வாய்ப்பை அதிகரிக்க வேலை வாய்ப்பு மையங்கள் மூலம் திறன் மேம்பாடு திட்டங்களை ஒன்றிய அரசு வழங்குவது குறித்து திருவண்ணாமலை சி. என். அண்ணாதுரை இன்று மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இளைஞர்களுக்கு வழிகாட்டும் வகையில் வேலைவாய்ப்பு மையங்கள் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் நடத்தப்பட்ட தொழில் திறன் மேம்பாடு மற்றும் ஆலோசனைத் திட்டங்கள், வேலைவாய்ப்பு மையங்கள் மூலம் வழங்கப்பட்ட வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை, நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு மையங்களின் செயல்திறனை ஒப்பிடும் ஆய்வறிக்கை மற்றும் பெண்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட விளிம்புநிலை மக்கள் வேலைவாய்ப்பு மையங்கள் மூலம் முழுமையாக பயன்படைவதை உறுதிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போன்றவைகளின் விவரங்களை அரசு வெளியிட வேண்டும் என அவர் தனது அறிக்கையில் கேட்டுள்ளார்.

4. கல்விக்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

தரணிவேந்தன்

நடப்பு நிதியாண்டில் கல்விக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதியின் சதவிகிதம் எத்தனை என கேட்டு ஆரணி தொகுதி தரணிவேந்தன் மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார். பயிற்சி மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட முதன்மை, இடைநிலை, உயர்கல்வி, தொழிற்கல்வி போன்றவற்றிற்கு பிரிவுவாரியாக ஒதுக்கப்பட்ட நிதி, தமிழ்நாட்டில் எல்லோரையும் உள்ளடக்கிய தரமான கல்வியை வழங்குவதற்காக ஒன்றிய அரசின் எந்தெந்த திட்டங்களுக்கு இந்நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது மற்றும் மொத்த ஜிடிபியில் கல்விக்கான ஆறு சதவீதத்தை எட்டுவதற்கு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன போன்ற விவரங்களையும் கேட்டுள்ளார்.

5. கீழடி அறிக்கைகள் - தாமதம் ஏன்?

டாக்டர். ராணி ஸ்ரீகுமார்

கடந்த 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட கீழடி முதல் கட்டம் மற்றும் இரண்டாம் கட்ட அகழ்வாராய்ச்சி அறிக்கைகள் அச்சிடப்பட்டு பொதுமக்களின் பார்வைக்காக வெளியிடப்படுவதில் இன்னும் தாமதம் ஏன் என்று ஒன்றிய அரசிடம் தென்காசி மக்களவைத் தொகுதி திமுக உறுப்பினர் டாக்டர். ராணி ஸ்ரீகுமார் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும் கடந்த பத்து ஆண்டுகளில் நாட்டில் நடைபெற்ற தொல்லியல் அகழ்வாராய்ச்சிகளின் பட்டியல் அவற்றின் அறிக்கைகள் வெளியிடப்பட்ட தேதியுடன் வெளியிட வேண்டும் என வும் அவர் கேட்டுள்ளார்.

கரூர் – கிருஷ்ணராயபுரம் தொகுதிகளில் பொதுமக்களிடம் கோரிக்கை மனு!

ரூ.47.39 லட்சம் மதிப்பில் புதிய கட்டிடங்கள்!

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்தார்!

கரூர், டிச.18-

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கரூர், கிருஷ்ணராயபுரம் தொகுதியில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று, ரூ.47.39 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடங்களை திறந்து வைத்தார்.

மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில் கரூர் மற்றும் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 2ம் கட்டமாக பொதுமக்களை நேரில் சந்தித்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

நிகழ்ச்சிகளில் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி பேசியதாவது:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக பல்வேறு சிறப்பான நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக மகளிர்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணம், கலைஞரின் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் மாதம் ரூ.1000 மகளிர் உரிமைத் தொகை, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம். நான் முதல்வன். மக்களை தேடி மருத்துவம்என பல்வேறு சிறப்பான திட்டங்கள் செயல்பட்டு வருகிறது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நமது கரூர் மாவட்டத்திற்கு அரசு வேளாண் கல்லூரியை வழங்கி உள்ளார்கள். கரூர் மாவட்டத்தில் வேலை வாய்ப்பை உருவாக்கும் கையில் 200 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் நிறுவனம் மற்றும் ஐடிபார்க் அமைக்கப்படும். முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க "உங்களில்ஒருவன்.உங்களுக்கானஒருவனாக இருந்து செயல்பட்டு வருகிறேன். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்களுடன் முதல்வர். உங்களைத் தேடி உங்கள் ஊரில் போன்ற திட்டங்கள் மூலம் அனைத்துத் துறை அரசு அலுவலர்களும் பொதுமக்களுடைய இடத்திற்கே சென்று அவர்களுடைய கோரிக்கைகளை மனுவாக பெற்று அதனை 30 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென ஆணையிட்டுள்ளார்கள். திராவிட மாடல் ஆட்சியில்பொதுமக்கள் அரசு அலுவலகங்களை தேடி சென்ற நிலையை மாற்றி மக்களைத் தேடி அரசு என்ற நிலையை உருவாக்கியுள்ளார்கள்.

அந்த வகையில் இன்றைய தினம் 2ம் கட்டமாக கரூர் மற்றும் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட 11வதுவார்டு, 12வது வார்டு, 17வதுவார்டு:18வதுவார்டு, 19வது வார்டு. 20வது வாரிடு, 21வதுவார்டு, 32வது வார்டு 33வதுவார்டு. 34வது வார்டு. 35வது வார்டு, 38வது ஆகிய வார்டுகளில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு

கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

அனைத்து மனுக்கள் மீது உடனடியாக பரிசீலனை செய்து தகுதியுடைய அனைவருக்கும் தமிழ்நாடு அரசின் நலத்திட்ட உதவிகளை விரைவாக வழங்குமாறு தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

முன்னதாக ஊரக வளர்ச்சி துறையின் சார்பில் மகாத்மா காந்தி தேசிய வேலை ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் ரூ.28.01 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக ஈட்டப்பட்ட மின்னாம்பள்ளி, பஞ்சமாதேவி ஊராட்சி மன்ற கட்டிடத்திணையும். 15வது நிதிக் குழு மானியத்தின் மூலம் ரூ.19.38 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி ஊராட்சி கருங்கல் காலனியில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி என மொத்தம் ரூ.47.39 இலட்சம் மதிப்பீட்டிலான புதிய திட்டப்பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அமைச்சர் திறந்து வைத்தார். தொடர்ந்து தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பாக அனைவருக்கும் வீடு திட்டத்தின் மூலம் கொளந்தாகவுண்டனூரில் ரூ.17.43 கோடி மதிப்பீட்டில் தரை மற்றும் ஐந்து தளங்களுடன் 125 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானப் பணிகளை அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் லிமிடெட் கரூர் மண்டலம் சார்பாக கரூர்விழுப்புரம். கரூர், கோயமுத்தூர். பள்ளப்பட்டி, விழுப்புரம் ஆகிய தடங்களுக்கு புதிய பேருந்துகளை கரூர் பேருந்து நிலையத்திலிருந்து அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம் (குளித்தலை). ஆர். இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கா.பெரோஸ் கான் அப்துல்லா. மாவட்ட வருவாய் அலுவவர் ம.கண்ணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஸ்ரீலேகா தமிழ்ச்செல்வன். மாநகராட்சி மேயர் வெ.கவிதா கணேசன். துணை மேயர் ப.சரவணன், மண்டல குழு தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், ஆர்.எஸ்.ராஜா, அன்பரசு, சக்திவேல், மாநகராட்சி ஆணையர் கே.எம்.சுதா. போக்குவரத்து கழக பொது மேலாளர் சிவசங்கரன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் உதவி நிர்வாக பொறியாளர் தமிழரசு, மாமன்ற உறுப்பினர்கள். கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

கரூர் கிருஷ்ணராயபுரம் தொகுதியில் வார்டு வாரியாகச் சென்று பொதுமக்களைச் சந்தித்து மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி கோரிக்கை மனுக்களைப் பெற்றார். உடன் கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், மண்டலக் குழு தலைவர்கள் எஸ்.பி. கனகராஜ், கோல்ட்ஸ்பாட் ஆர்எஸ்.ராஜா, அன்பரசு, சக்திவேல் மற்றும் பலர் உள்ளனர்.

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் பிரமாண்ட வரவேற்பு!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கோவை வருகை!

மாவட்டச் செயலாளர்கள் நா.கார்த்திக் – தொ.அ.ரவி – தளபதி முருகேசன் வேண்டுகோள்!

கோவை, டிச. 18-

கோவைக்கு வருகை தரும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் மாபெரும் மகத்தான பிரம்மாண்ட வரவேற்பு அளிக்கப் படுகிறது என கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ. ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்களது அறிக்கை வருமாறு:-

கழக இளைஞர் அணிச் செயலாளர் - தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்,

இன்று (18.12.2024-புதன்கிழமை) மதியம் 12.00 மணியளவில், சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை விமான நிலையம் வருகை தருகிறார்

அவருக்கு விமான நிலைய பகுதியில் மேட்டுப்பாளையம், சூலூர் சட்டமன்ற தொகுதி கழகத்தினர்

சார்பில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்படுகிறது.

மதியம் 12.15 மணியளவில் பீளமேடு ஹோப் காலேஜ் பகுதியில் சிங்கா நல்லூர் தொகுதி, தெற்கு தொகுதி கழகத்தினர் சார்பில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்படுகிறது.

மதியம் 2.30 மணி அளவில் அரசு தொழில்நுட்ப கல்லூரியில் (GCT) நடைபெற உள்ள, நான் முதல்வன் திட்டத்தின் கீழ் தேர்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நிகழ்ச்சியில் பங்கேற்று சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்குகிறார்.

மதியம் 3 மணி அளவில் கோவை சத்தி சாலையில் ஆம்னி பேருந்து நிலையம் எதிரில் பெத்தேல் மாநகரப் பேராலயத்தில் நடைபெற உள்ள பெந்தேகொஸ்தே சபைகளின் "கிறிஸ்மஸ் விழாவில் கலந்துக் கொள்கிறார்.

மாலை 3.30 மணி அளவில் கோவை வ.உ.சி. மைதானத்தில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார் எம்.பி. அலுவலகத் திறப்பு விழாவில் பங்கேற்று அலுவலகத்தைத் திறந்து வைக்கிறார்.

மாலை 4 மணி அளவில் கோவை நவஇந்தியா அருகில் எஸ். என்.ஆர்.கலையரங்கத்தில் நடைபெறும், மாவட்ட அணிகளின் தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் பங்கேற்கிறார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மேயர், துணை மேயர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகரக் கழக, ஒன்றியக் கழக, பகுதிக் கழக பேரூர்க் கழக, வட்டக்கழகச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து கழக செயல்வீரர்கள், அனைத்து கழகத் தொண்டர்கள், பி.எல்.ஏ.2 நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு, ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தங்களது அறிக்கையில் கூறியுள்ளனர்.